திராவிடநாடு

T. K. Pa...

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 4-2-51 | இதழ் 33

பண பாணம்

"நான் சினிமாவுக்கு வாடான்னு கூப்பிட்டேன். வந்தியா? இப்ப மட்டும் என்னிடம் மிட்டாய் கேட்கிறாயே—நான் கொடுப்பேனா—போடா!"

சிறு குழந்தைகளின், சில்லரைச் சச்சரவுகளின் போது சிந்தப் படும் இந்தச் சொற்கள் சாதாரணமானவைதான்! "சிறுசுகள் வயதாகிவிட்டால் இப்படியெல்லாமா, விளையாடப் போகிறதுகள்" என்று காட்சியைக் காண்போர், பேசிக்கொள்வர், சிறு விஷயம், என்ற அலட்சிய மனோபாவத்தோடு.

கொஞ்சம் தாராள மனதுள்ளவர்கள் அருகிலிருந்தால், "ஏய்' கொடுடா — உன்னைப்போல் அதுவும் குழந்தைதானே. கொடேன்!" என்று, அதட்டுவர்.

பெரிய மனிதத்தன்மை-குழந்தைகளிடம் காணமுடியாது' எனபதால், அலட்சியமும; குழந்தையின் மனதில், தாராள மனோபாவம் ஏற்பட வேண்டும் என்ற ஆசையால் அதட்டுதலும், அதுபோன்ற நேரங்களில், உருவாகும்.

ஆனால் குழந்தைப் புத்தி, தெரியாத்தனம் என்று சிறுவர்களின் செயலை 'சிறுபிள்ளைத்தனம்' என்று கருதுவோரின் அன்றாட வாழ்க்கையைக் கவனித்தால் ருசிகரமான நிகழ்ச்சிகள் கிடைக்கும்!

"ரொம்ப யோக்கியன் போல வந்துட்டியே! நமக்குத்தான் நிலம்-நம்புங்க. எது எப்படியானாலும் உங்களுக்கே முடிச்சுவைக்கிறேங்க. அப்படி இப்படின்னு அளந்துவிட்டு பிறகு பெருமாள் செட்டியாருக்கு நிலத்தை வாங்கித் தந்த 'பெரிய மனுஷருல்லே' இவரு! கேட்க வந்துட்டாரு. உதவி வேணுமாம் உதவி! போய்யா—அவன்கிட்டேயே போம். செய்வான்."

"ஏம்பா! நூறு நூறு, கேட்டபோதெல்லாம் தந்தேனே. கடைசியில் இப்படி கையை விரிச்சுட்டியே. ரொம்ப யோக்கியமா-அந்தப் பெண் நமக்குக் கிடைக்காதுங்கன்னு, ஆரம்பத்திலேயே சொன்னா என்னவாம்! எவ்வளவு காசு, காலம் வீணாப் போச்சு! எல்லாம் கெட்டுப் போயிட்டிங்க—நன்றி மறந்துட்டீங்க!"

இதுபோன்ற காட்சிகளை, "பெரிய மனிதர்களி"டம், நாம் காணவும்—கேட்கவும் முடியும்!

சிறுவன் — தன்னுடன் சினிமாவுக்கு வராததற்காக மிட்டாய் தர மறுத்தான்!

நிலத்தை வாங்கித் தராததோடு இன்னொருவனுக்கு முடித்துவைத்தான் என்பதால் மிராசுதார் இரைந்தார்!

இரண்டு நிகழ்ச்சியிலும் ஆளும் உருவமும்தான் மாற்றமே ஒழிய—தரம் ஒன்றுதான்.

தான் சொன்னபடி கேட்கவில்லை என்பதால் 'கோபம் வந்தது குழந்தைக்கு. 'தனக்கு நிலம் சேரும்' என்று எதிர்பார்த்துக் கிடந்து, கடைசியில் கைநழுவிவிடும்போல் தோன்றியதும் எரிச்சல் வந்தது, நிலப்பிரபுவுக்கு.

மிட்டாய் தர மறுத்தபோது 'குழந்தைச் செயல்' என்று கூறிய பிரபு, தன் சகா தனக்கு நிலத்தை முடித்துத் தரவில்லை என்றதும் சீறினார்—சினந்தார்.

சீற்றமும் சினமும் அவருக்கு உருவாகியதன் காரணம், தனது சுய வாழ்வு பாதிக்கப் படுகிறதே, என்ற ஆத்திரம்தான்.

நிலம் கிடைத்தால்—வளம் பெருகும்!—இது, அவர் நினைத்தது.

நினைத்தபடி, நடக்கவில்லை. அவரது சுயநலம் பாதிக்கப் பட்டது. எனவே, சீறினார்.

குழந்தையின் தெரியாத்தனத்தால், மிட்டாய் தர மறுக்கிறது என்று கூறிய 'பிரபு' தனது சுய வாழ்வுக்கான ஆசை பூர்த்தியாகாதபோது கோபத்தின் சின்னமானார்.

குழந்தைக்கு தர்மோபதேசம், செய்த அவர்-தன் சகாவிடமிருந்து "லாபம்" வரவில்லை என்றதும் கோபித்தார்.

இத்தகை மனிதர்கள், பலருண்டு. பல நிலையில் உண்டு.

இவர்களை நல்லோர் என்று கூறிவிடமுடியாது! நல்லுபதேசம் ஒரிடத்திலும், நல்வாழ்வு வழி தமோ

றியதால் ஆத்திரம் மற்றோரிடத்திலும் கொள்ளும் இவர்களை 'பெரிய மனம்' படைத்தவர்கள் என்று புகழ்வது பொருந்தாது—தகாது!

ஆனால், சமுதாயத்தின் விசித்திர நிலை, இத்தகைய 'சுகாப்பூச்சி'களின் கூண்டாகத்தானிருக்கிறது.

பழிக்குப் பழி வாங்கும் மனோபாவமும், சமயத்துக்கேற்றவாறு நிலைமையை மாற்றிக்கொள்ளும் போக்கும் கொண்டோரே அதிகம் உலவுகின்றனர்!

“போனால் போகட்டும் — நீயே யோசித்துப்பார். என்னிடம் உறுதி தந்துவிட்டு நிலத்தை இன்னொரு ஆசாமிக்குத் தரலாமா? சரி — பரவாயில்லை! நெல்லா வேண்டும்—எத்தனை மூட்டைகள். வீட்டிற்கே கொண்டுவரச் சொல்லட்டுமா?” என்று அன்பால், கெடுதல் செய்தோரை, அணைக்கும் அன்பு உருவங்கள் சமுதாயத்தில் சிலர்தான்; அதுவும், குடத்துவிளக்குபோல!

பகட்டான ஒளியோடு பவனிவருவோரே, சூதுமதியுடையவர்களாக இருக்கிறார்கள். சுருங்கச்சொன்னால் அந்தச் சூதுமதிதான் அவர்களை 'பகட்டான வெளிச்சத்தில் உலவ விடுகிறது!

இந்தப்பகட்டு வெளிச்சங்கள் — பெரும்பாலும், பணக்காரப் பரம்பரையாகத்தானிருக்கும். இடுப்பொடிய வேலை செய்யும், ஏழையிடம் காணும் அன்புள்ளத்தை, ஆதரவுப்பிச்சை எடுக்கும் மாளிகையில் காண முடியாது.

காரணம், ஏழை — எதையும், பிறர்மூலம் எதிர்பாராதவன். தன்னையே நம்பியவன்.

பிறர்-பிரதாபலேயே வாழக்கூடியவன், பிறரை எத்துவதுதான் அவனது நித்தியவேலை!

X X X

இந்த அருமையானவிளக்கத்தை, இன்று உலகுக்கு, அமெரிக்காபாடம் சொல்லிக்கொண்டிருக்கிறது, தனது செயல்கள்மூலம்.

“சிறுநாடுகள்! எவ்வளவு திண்டாடுகின்றன, தெரியுமா? உலகமகா யுத்தத்தால் உருக்குலைந்து போய்விட்ட அவைகளின் கதியைக் கண்டாலே கண்கலங்குகின்றது! அங்குள்ள மக்கள் படும் அவதியைக் காணச் சகிக்கவில்லை. அதைத் தீர்த்து அங்கெல்லாம், நல்விளக்கேற்றி வைப்பதே நல்லசெயல். அதையே அமெரிக்கா செய்யப்போகிறது”

என்று மார்தட்டி, தினசரி விதவிதமாக, பேசிக்கொண்டிருந்த பெரிய நாடாகும் அமெரிக்கா.

பிரிட்டன்-இந்தியா தகராறு முடிவுறும் கட்டத்திலும், பாலஸ்தீனத்தில் யூத—அராபியர் தகராறு வளர்ந்துகொண்டிருந்த நேரத்திலும், அமெரிக்கா 'குழந்தைச் செயல்' கண்ட பிரபுபோல, நடந்துகொண்ட சம்பவங்கள், பலவுண்டு.

ஏழை நாடுகளுக்கு உதவுவதே எமது நோக்கம், பிற்பட்ட நாடுகளை தூக்கி விடுவதே எமது எண்ணம் என்று வானை எட்ட, அமெரிக்கா முழக்கியது. அதற்கான வகையில் மார்ஷல் திட்டம் போன்றவைகளையும் தயாரித்தது. அதுபடி, பலநாடுகளுக்கு உதவியும் பணமும் அளித்தது.

இந்த ஏற்பாடுகளைக் கண்ட பல நாடுகள் மயங்கின! 'ஏழைபங்காளன்' அமெரிக்கா, என்று புகழ்ந்துதிபாடின.

மோகன வலையில்-அகப்பட்டன, பல நாடுகள்.

ஏழ்மையாலும், போரின் விளைவால் ஏற்பட்ட சீர்கெட்ட நிலையாலும் பாதிக்கப்பட்ட நாடுகள் அமெரிக்காவை அண்ணாந்து நோக்கின!

ட்ரூமனைப் பற்றிய அந்தாதிகள், அமெரிக்காவின் நல்லெண்ணம் பற்றிய அருட்பாக்கள், மார்ஷல் திட்டத்தால் விளையக்கூடிய பலன்கள் குறித்த விளக்கங்கள் — கிளம்பலாயின.

பல நாடுகளில், அமெரிக்கவாடை கமழ்ந்தது!

அதிலும், புதிதாகச் சுதந்திரம் பெற்று தங்களைத் தாங்களே ஆளும் திறனும் வசதியுமற்றுத் திண்டாடிய இந்தியா, பர்மா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அமெரிக்காவின் செல்வாக்கு பரவியது. வெகுவேகமாகப் பரவியது.

“உதவி செய்வது” என்ற திட்டத்துடன், பெரிய நாடுகளைத் தனது ருஷ்ய எதிர்ப்புக் கூடாரத்தில் இழுத்துக் கொண்டிருந்தது அமெரிக்கா.

அது கண்டு நம் போன்றோர். சிரித்திடும் சிலந்தி, என்று வர்ணித்தோம், அமெரிக்காவை.

மோகன வலை—அதில் மோசம் போய்விடக்கூடாது என்று சொன்னோம்.

சூதுக்கோட்டம்—அதைச் சொந்த நண்பன் என பாவிப்பது பலன் தராது; படுபாதகம் விளைவிக்கும்! என்று விளக்கினோம்.

ட்ரூமன் நாமாவளியைப் பஜிப்பதிலும், விஜயலட்சுமிக்கு அமெரிக்கா தந்திருக்கும் மதிப்பைப் பரப்புவதிலும், நேருவின் விஜயத்தின் பெருமையைத் துதி பாடுவதிலும், தங்களை மறந்திருந்த தேசிய நண்பர்கள் — இதழ்கள் — நம்மை நோக்கி கெக்கலித்தனர்!

நேருவுக்குத் தரப்படும் மரியாதை கண்டு அசூயைப்படுகிறார்கள்—என்றெல்லாம ஆர்ப்பரித்தனர்.

“ஏழை பங்காளன் அமெரிக்கா— இடுப்பொடிக்கும் சர்வாதிகாரநாடு ரஷ்யா. ஆகவே, ரஷ்யா பக்கம் நாம் சாயக்கூடாது”-இது போல தலையங்கங்கள் தீட்டின, நமது தேசிய இதழ்கள்.

“அமெரிக்கா. ஜனநாயகநாடு ரஷ்யா - சர்வாதிகாரநாடு!” இப்படி. பிரசங்கம் செய்தனர், பிரபல தலைவர்கள்.

“அதோ வருகிறது கோடிக்கணக்கான ரூபாய். இதோ வந்துவிட்டன இயந்திரச் சாமான்கள்” என்றெல்லாம், கூவினர்.

“கம்யூனிசத்தை ஒழிப்போம்— ரஷ்யவாடை நாடவிடோம்” என்றெல்லாம், சங்கநாதங்கள் கிளம்பின.

பொதுவுடைமை என்பது ரஷ்யாவுக்குமட்டும் உரித்தான சொந்தச் சொத்து, அது மேலெங்கும் தலைகாட்டுதல் தகாது — என்ற கருத்தில் காரசாரமாக ரஷ்யாவை எதிர்த்துப் பேசுவதும், அமெரிக்காவை 'ஆபத்பாந்தவன்' என அழைப்பதுமாக, முழக்கங்கள் செய்தனர்.

அவர்கள் முழக்கம் கேட்ட நாம் வருந்தினோம்.

அவசர ஆர்வத்தால், முதலாளித்துவ முகாமில் போய்விழுகிறார்கள் என எச்சரித்தோம்.

அமெரிக்கா கல்லுகனி செய்கிறேன் என்று சொல்லுவதும், அது போலச் செய்வதும், சுயநலமே காரணம். அமெரிக்கா ஒரு பசப்பிடும் மோகினி! பாசங்காட்டி படுகுழிக்கு இழுக்கும் சூது வலை! என்றெல்லாம், சொன்னோம்.

நாம் அப்படிச் சொல்வதை கையாண்டி செய்த நண்பர்களின் கருத்து விளக்கத்துக்கான சம்பவம் ஒன்று, வெளியாகி யிருக்கிறது.

சம்பவம் என்று சொல்வதைவிட "இந்தியாவின் மானம் பறிபோகும் படலம்" என்று சொல்வது கூட பொருந்தும்.

X X X

இந்தியாவில் உணவு நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் தத்தளிக்கும் நேரு சர்க்கார், சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு அமெரிக்காவுக்கு ஒரு வேண்டுகோளை அனுப்பியது.

> "இந்தியா மிகவும் மோசமான நிலையிலிருக்கிறது. பஞ்சமும் பரிதாபமும் பயமுறுத்தப் படுத்துகிறது.
>
> ஆகவே, தயவு செய்து அங்கே இருக்கும் கோதுமைக் குவியலில் இருபது இலட்சம் டன் அனுப்புங்கள்."

என்று, ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தது—கல்லும் கரையும் வகையில.

இந்தியா அமெரிக்காவை இனாமாகத் தருமாறு கோரவில்லை!

> "மேற்படி கோதுமைக்கான விலை 95 கோடி ரூபாயைத் தந்துவிடுகிறோம். கொஞ்சம் தவணை கொடுத்தால், சிறிது சிறிதாகத் தீர்த்து விடுகிறோம். நாங்கள் உள்ள நிலையில் உடனடியாக 25 கோடி தர இயலாது"

என்று, விளக்கி, வலியுறுத்தி நேரு சர்க்கார், கோரிக்கை அனுப்பியிருந்தது.

அமெரிக்காவில்—கோதுமை அதிகம் இருப்பது உண்மை.

கைமேல் பணம் வாங்காமல் கொடுக்கக் கூடிய வசதியுள்ள நாடு அமெரிக்கா என்பதும் நிஜம்.

இந்தியா கேட்ட கோதுமையை இனாமாகக்கூட வழங்கி விடலாம் அமெரிக்கா!

95-கோடி—பொன் விளையும் அந்த நாட்டுக்கு ஒரு பிரமாதமல்ல.

இருந்தும்—இன்னும், எந்த விதபதிலும் கிடைக்கவில்லை.

கிடைக்காதது மட்டுமின்றி, "இந்தியாவின் கோரிக்கை கவனிக்கப்பட வேண்டியதுதானா என்பதைக் குறித்து" ஆலோசனை செய்கிறார்களாம்!

உணவில்லை என்று பரிதாபத்தோடு கேட்கிறது இந்தியா.

உதவலாமா? அவசியம் தானா? என்று ஆலோசனை செய்கிறது அமெரிக்கா.

ஆபத்பாந்தவன், அருமை நண்பன் என்றெல்லாம் அமெரிக்காவைப் போற்றிய நண்பர்கள் இப்போது திகைக்கிறார்கள்.

உலகில், அமெரிக்காவின் போக்கு ஒரு பரபரப்பையே உண்டுபண்ணியிருக்கிறது.

"இந்தியாவும் அமெரிக்காவும் எவ்வளவு அன்யோன்யமாக இருந்தன"

"வேடிக்கைதான்! இந்தியாவுக்கா அமெரிக்கா கோதுமை அனுப்பவில்லை?"

"நம்ப முடியவில்லையே"

இதுபோல, டலவிதமாகப் பேசுகின்றன, உலக நாடுகள்.

இந்திய சர்க்காருக்கே சிறிது திகைப்பும் அருவருப்பும் தட்டியிருக்கிறது.

ஏழை நாடுகளின் குறை தீர்ப்பதே எனது பணி என்று முழக்கமிட்ட அமெரிக்கா, மக்களின் பட்டினி ஓலம் கேட்டும் கோதுமை அனுப்பாதது ஏன்? என்று, பற்பல சந்தேகங்கள் நடமாடத் துவங்கியுள்ளன.

பசி! பசி! என்று ஓலமிட்டு, இருக்கும் கோதுமையை உதவுங்கள் என்று வேண்டிய இந்தியாவுக்கு உதவ மறுத்த அமெரிக்கா, தென் ஆபிரிகாவுக்கு 800 லட்சம் டாலர் (சுமார் 380 கோடி ரூபாய்) கடனாகத் தந்துள்ளது.

95 கோடி ரூபாய் மதிப்புள்ள கோதுமையை அனுப்பத் தயங்கும் அமெரிக்கா 380 கோடி ரூபாய், தென்ஆபிரிகாவுக்குத் தந்திருக்கிறது!

இந்தியாவுக்கு மறுத்ததும், அதே நேரத்தில் ஆபிரிகாவுக்கு நிறைய பணம் அளித்ததும் ஏன், என்று எண்ணும்போதுதான், நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பெரிய மனிதர்களின் குணம்—நிலப் பிரபு – தன் சுயவாழ்வு பாதிக்கப்பட்டதும் சீறினாரே, அது நினைவுக்கு வருகிறது.

* * *

ஐக்கிய நாடுகள் சபை, போருக்குப் பின் உருவாக்கப்பட்ட சமாதான சபையாகும். அது தோன்றி ஐந்தாண்டுகள் ஆகிவிட்டன!

இந்த ஐந்தாண்டுகளும், அச்சபை ரஷ்ய—அமெரிக்கக் கூடாரங்களின் பலப் பரீட்சை பார்க்கும் இடமாகவே இருந்து வருகிறது. அந்த பலப் பரீட்சையில், இதுவரையில், அமெரிக்காவே வெற்றி பெற்று வந்தது! தான் நினைத்தபடி, எக்காரியத்தையும், சாதித்துக்கொண்டது. இதுவரை, அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மான மெதுவும் நிறைவேறாமற் போகவில்லை!

ஆனால், அண்மையில் சீனா குறித்து, அமெரிக்கா ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தது.

அது கொரியப் பிரச்னை சம்பந்தமாகும்.

கொரியப் போரில் ஈடுபட்டிருக்கும் செஞ்சீனாவை ஆக்கிரமிப்பு நாடு என்று அறிவித்து அதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் கம்யூனிசமல்லாத நாடுகளின் ஒற்றுமையைக் காக்கவேண்டும் என்பதே மேற்படி தீர்மானமாகும்.

இத்தீர்மானத்தை, இந்தியா ஆதரிக்கவில்லை.

கொரியப்பிரச்னையை, வேறுவகையில் தீர்க்கவேண்டும் என்று இந்தியா வெளியிட்டுவிட்டது.

செஞ்சீனாவை ஆக்கிரமிப்பு நாடு என்று பிரகடனப்படுத்திவிட்டு பின் அதன்மீது போர்ப்பாணங்களை வீசலாம் என்பதே அமெரிக்காவின் ஆபத்தமாகும்.

இந்நிலை — மூன்றாவது உலகப் போருக்கு கொண்டுசெல்லும் என்று கருதும் இந்தியா, மேற்படி தீர்மானத்தை ஆதரிக்கவில்லை முட்டுக்கட்டையிட்டுவிட்டது.

ஐக்கியநாடுகள் சபையில் தோல்வி!

இலண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டிலாவது, தனது எண்ணம் நிறைவேற வழி கிடைக்குமென அமெரிக்கா எதிர்பார்த்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 4—2—51 [காஞ்சி

திண்டாட்டம்!

✲

நாடாள வந்திருக்கிறோம் நாங்கள்—
நாங்கள் யார் தெரியுமோ—
குடியாட்சி கோமான்கள்! மக்களின் மதிப்பைப் பெற்ற மகான்கள்! நாட்டு மக்களின் பிரதிநிதிகள் நாங்களேதான். இதில் சந்தேகமில்லை.

நாட்டுமக்கள் எங்களைத்தான் ஆட்சி பீடத்தில் அமர்த்தி 'அழகு' பார்க்க எண்ணினார்கள்—அதனைச் செய்தும் பார்த்துவிட்டார்கள்!

குடியாட்சி தினம் கொண்டாடுகிறார்கள், 'குதூகலத்தோடு!' மக்கள்!

உணவு கேட்டால், தடியடி தந்தோம்!
நூல் கேட்டனர், ஆடை செய்ய,
துப்பாக்கியை நீட்டினோம்!
உரிமை கேட்டனர் — சிறையைக் காட்டினோம்!

கூட்டங்களுக்குத் தடை போட்டு வருகிறோம் பெருமிதமாக—
நாடகங்களை நடத்தாதே என்று கட்டளைகள் பிறக்கின்றன எங்கள் ஆட்சியில்—புத்தகங்கள் எழுதுவோரை விடுகிறோமா,
வெளியிட்டவரை, அச்சிட்டவரை, அட்டைப் படம் வரைந்தவரைக் கூட விடுவதில்லை—
எல்லோர் மீதும் வழக்கு—
தண்டனை — அபராதம் — இன்னும் எத்தனை எத்தனையோ உண்டு!

குடியாட்சியின் மாண்புகளை எல்லாம் கூறிடப் போமோ—
'அனுமார் வால்' போல நீளுமே—'ஆதி சேட' நாவினருக்கே முடியாதே!...

குடியாட்சி தினத்தில், இப்படிப் படித்திருக்கவேண்டும் — படிக்கவில்லை.

உண்மையை, உள்ளபடியே கூறுவதானால், இப்படித்தான் அவர்கள் 'ஆட்சி அறிக்கை' அமைந்திருக்கும். உண்மைக்குத்தான் மதிப்பில்லையே! ஆகவே வேறு கூறினர் ஏதேதோ. உண்மைக்குப் புறம்பான எல்லாவற்றையும்!

X X X

கொண்டாட்டம் நடத்தினர் — இந்தியா குடியரசாகி ஓராண்டு முடிந்துவிட்டதால், சென்ற திங்கள் 26ம் நாள், நாடெங்கும்! ஆட்சியாளரின் கொண்டாட்டத்தைக் கண்டு நாடு வேடிக்கை பார்த்தது!

குடியாட்சி—ஆனால் குடிமக்களோ, குதூகலத்துடன் இல்லை! ஆனால் கொண்டாட்டம் நடத்தினர் ஆளவந்தார்.

ஓராண்டு முடிந்துவிட்டது என்று 'காலண்டர்' காட்டிற்று ஆகவே, கொண்டாடினர்—மக்கள், குடியாட்சி பெற்றதால் குதூகலித்துவிடவில்லை—அதற்காக கொண்டாட்டம் நடத்தவில்லை.

விழா, என்றால், மகிழ்ச்சி அங்கு நிறைந்திருக்கவேண்டும்! கொண்டாட்டம்—ஆனால் அங்கு குதூகலமில்லை!

தேதி பார்த்து திருவிழா நடத்தினரே தவிர, களிப்பு மிகுதியில் கொண்டாட்டம் நடத்தவில்லை.

ஆட்சியாளரின் அலுவலகங்களிலே, 'ஆனந்தப் பள்ளு' பாடப்பட்டதே தவிர, மக்கள் மன்றத்திலே மகிழ்ச்சியில்லை.

ஆட்சியாளரின் கட்சியினர், 'குதூகல வேடம்' போட்டுக் காண்பித்தனர் — மக்கள் அவர்களை மதிக்கவில்லை

எங்கும் பசி - பட்டினி! அதனைத் தீர்த்து வைக்க முடியவில்லை.

நூல் இல்லை — ஆகவே தொழிலாளி வாடுகிறான், அந்த வாட்டத்தைப் போக்க முடியவில்லை.

நாட்டுவளத்தைப் பெருக்க முடியவில்லை. நல்வாழ்வு தரமுடியவில்லை. மக்கள் துயரங்கள் மறைய மார்க்கமில்லை. துன்பத்திலே மூழ்கிக்கிடக்கிறார்கள்—அவர்களைக் காக்க முயற்சி காணோம்.

ஆனாலும், குடியாட்சியாம்! இதற்குக் கொண்டாட்டமாம்!

X X X

வாழ்வு தரமாயிருக்கட்டும்—உரிமையாவது தந்துள்ளனரா? இல்லையே! எப்படி மகிழ்ச்சி இருக்கும்? மகிழ்ச்சி இருந்தால்தானே, மக்கள் கொண்டாடுவர்.

குடியாட்சி என்றால் மக்களுக்காக, மக்களாலேயே ஆளப்படும் மக்களின் ஆட்சியாகும்! ஆனால் அங்ஙனமில்லை

மக்களின் 'பிரதிநிதி' என்ற பெயரில் ஒரு 'கட்சி கூடாரமாகி' விட்டதே, ஆட்சி—மக்களுக்காக ஆள்வதாகச் சொல்கிறார்கள்—ஆனால மக்களின் உரிமைகளை மதிக்கிடவே இல்லை இது மக்களின் ஆட்சியென்றா யார் ஒப்புவர்—எவர் ஏற்றுக்கொள்ள முடியும்?

மனிதனின் அடிப்படை உரிமைகளைக் கூட மறுத்துவிட்டார்கள்.

எண்ண, பேச, எழுதக்கூட உரிமையில்லை

கூட்டங்களுக்குத் தடை — நாடகங்களை நடத்தாதே என உத்தரவு —ஏடு எழுதுவோர்களை மட்டுமல்ல, வெளியிட்டவர், அச்சிட்டவர், எல்லோரையும் வழக்கு மன்றத்திற்கு இழுத்து வந்தனர்.

'இது அநீதம்' என்றால் சிறை—அதுமட்டுமா, தூக்குத்தூக்கி, துண்டு பேசிற்று!

வாழ்வு தரவில்லை! உரிமையும் பறிபோய்விட்டது!

கொண்டாட்டம் நடத்துகிறது, காங்கிரசாட்சி—மக்களோ திண்டாட்டம் போடுகின்றனர்.

பசியால் வாடுகின்றனர்-வறுமையால் வாடுகின்றனர்-அவர்களை வாழ்வித்து, உள்ளத்திலே களிப்புண்டாக்கி, நாட்டிலே செழுமையையும் ஏற்படுத்திவிட்டால், தினமும் திருவிழாதான், கண்ட கோலமெல்லாம் கொண்டாட்டந்தான்!

தேதி வந்துவிட்டது, திருவிழா கொண்டாடு என்றால், 'திண்டாட்டம் போடுகிற நாங்கள், கொண்டாட்டம் எப்படி நடத்துவது' என்றுதானே மக்கள் கேட்பர்.

மக்கள் கேட்கவில்லை - கேட்டால் தான் 'குடியரசு தினம்' கொண்டாடிய கோமான்கள், உடனே அடக்குமுறையை அழைத்து வந்துவிடுகின்றனர் - ஆர்ப்பாட்டபுரியினரா பாடிக்கொள்கின்றனர்.

குடியரசு தினம் கொண்டாடுகிறார்கள் ஆட்சியாளர்-'குடியரசால்' திண்டாடுகின்றனர் மக்கள்.

குடியரசு தினம் கொண்டாடியவர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும் நாட்டு நிலையை- பார்த்தால், கொண்டாட்டம் நடத்த நினைக்கமாட்டார்கள் - நாட்டு மக்களின் திண்டாட்டத்தை துரத்திடத்தான் முனைவர்.

✲

★ கருப்பண்ணசாமி யோசிக்கிறார்! ★

[சி. என். ஏ.]

மணி ஒலித்தது!

கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

கருப்பண்ணசாமி அலறியபடி உள்ளே ஓடலானார், ஒளிந்து கொள்ள இடம் தேடினார்.

'களுக்'கென ஓர் சிரிப்பொலி கேட்டது. கருப்பண்ணசாமி, கோபங்கொண்டு, "வேதனைப்படுகிறேன் நான்—இந்த வேளையில் கேலி வேறு செய்கிறாயா?' என்று கேட்டார், சிரித்தபடி தன் எதிரே வந்த தேவியைப் பார்த்து.

"கருப்பண்ணா!—என்ன கலக்கம்! ஏன் ஒடுகிறாய், ஒளிகிறாய்"—என்று தேவி கேட்க, கருப்பண்ணசாமி "காதிலே விழவில்லையா, மணிச் சத்தம்" என்று கேட்டார்.

'விழுந்தது—அது கேட்டு அச்சம் ஏன் வரவேண்டும்—ஆச்சரியமாக இருக்கிறதே"—என்று தேவி கேட்டார்.

"உனக்கும் ஒன்றும் புரியவில்லை. யாரோ பக்தர்கள்போலா வருகிறார்கள்......!" என்று பயத்துடன் பேசினார் கருப்பண்ணர்.

"பைத்யமே! பக்தர் வருகிறார் என்றால் பயம் ஏன் வரவேண்டும்? உன்னைத் தொழ, சூடம் கொளுத்த, சோடசோபசாரம் செய்ய, படையல் போட வருகிறார்கள் பக்தர்கள். இதற்கு ஏன் பயப்படவேண்டும்... ஓஹோ! இவ்வளவு பூஜையை ஏற்றுக்கொண்டும் எங்கள் கஷ்டத்தைப் போக்காமலிருக்கிறாயே கருப்பண்ணசாமி!—என்று அந்த பக்தர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்ற பயமா?" என்றார் தேவி.

கருப்பண்ணர், "போதும் தேவி உன் தொல்லை. வரம் தந்து அவர்களின் குறையைப் போக்கவில்லை என்பதற்காக என்மீது சீறுவார்கள் என்ற பயம் எனக்கு இல்லை — நானென்ன தேவாலய அரசு செலுத்தி அனுபவமில்லாதவனா... இங்கு இல்லாவிட்டால், மேலுலகில் என்னைப் பூஜித்த பலன் கிடைக்கும் என்று பக்தர்கள் எண்ணிக்கொள்வார்கள், இங்கே அவர்களுக்குள்ள குறையைத் தீர்த்து வைக்காததற்காக என்மீது சீறமாட்டார்கள் என்ற சித்தாந்தம் எனக்கும் தெரியும். நான் பயப்பட்டது அதனால் அல்ல" என்று பெருமூச்சு வருமளவு வேகமாகப் பேசினார் கருப்பண்ணசாமி.

தேவியார் வேகமாகச் சென்று, வாயிலில் பார்த்துவிட்டு வந்து, "கருப்பண்ணா! பக்தர் யாருமல்ல, காற்று பலமாக அடித்ததால் மணி ஓசை கேட்டது. பயப்படாதே. சரி, பக்தர்கள் வருகிறார்கள் என்றால் ஏன் பயம் உண்டாகிறது உனக்கு—அதைச் சொல்லு" என்று கேட்டார்கள். பக்தர் யாரும் வரவில்லை என்று தெரிந்ததால் தைரியம் பெற்று, தன் பீடத்தில் அமர்ந்து, எதிரே ஒரு பீடத்தில் அமர்ந்த தேவியிடம் கருப்பண்ணசாமி, விளக்கம் கூறலானார்.

"தேவி! பக்தர்களால் எனக்கு ஏற்பட்ட ஆபத்தும் சங்கடமும், உனக்கு என்ன தெரியும்! வர வர இந்த 'வேலை'யிலேயே எனக்கு வெறுப்பு வளர்ந்துகொண்டு வருகிறது. தான் செய்த மோசத்தை அரை பலம் கற்பூரப் புகையிலே மறைத்துவிடலாம் என்று எண்ணுகிறான். அதற்கு நான் உடந்தையாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறான். இவனுடைய பேராசைக்கு நான் துணை செய்ய வேண்டும் என்று எண்ணுகிறான் — காரணம் கேட்டால் பெரிய படையலிட்டிருக்கிறேன் என்று கூறுகிறான்."

தேவி குறுக்கிட்டு, "இதென்ன புது விஷயமா கருப்பண்ணரே! இப்படிப்பட்ட பக்தர்களை நாம் நெடுங்காலமாகப்பார்த்து, பழகிக்கொண்டு தானே வந்திருக்கிறோம்" என்று கூறிட, கருப்பண்ணசாமி, மனக்கொதிப்புடன், "இப்போது பக்தர்கள் அந்த அளவோடு நின்று விடவில்லை தேவி—கேவலப்படுத்துகிறார்கள், போலீசின் பாதுகாப்பிலே வாழவேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்னை" என்று கூறினார்.

"கேவலப்படுத்தினார்களா! யார்!" என்று தேவி, ஆச்சரியத்துடன் கேட்டார்.

அவரைக் கேலி செய்வதுபோல கருப்பண்ணர், "யார்!" — என்று ஒருமுறை கூறிவிட்டு, "நாஸ்திகர்கள் கேவலப்படுத்தினார்கள் என்று கருதுகிறீரா தேவி! அவர்களல்ல. அவர்கள் மனிதருடன் பழகுவதும் மனிதர்களின் பிரச்சினைகளைக் கவனிப்பதுமாகக் காலந் தள்ளுகிறார்கள். என்னைக் கேவலப்படுத்தியது, பக்தர்கள்!—கை கூப்பித் தொழுது, கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்களே, கற்பூரம் கொளுத்துகிறார்களே, அந்த பக்தர்கள்தான், என்னை, செச்சே! இப்போது எண்ணிக்கொண்டாலும் எனக்கே வெட்கமாக இருக்கிறது, கேவலப்படுத்தினார்கள்—போலீசாரின் துணையால் நான் மீட்கப்பட்டேன்" என்று கூறினார். தேவிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"கருப்பண்ணரே! என்ன பேசுகிறீர். பக்தர்கள்—போலீஸ்—ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பேச்சாக இருக்கிறதே" என்றார்.

"தேவி, கேள் இந்த விஷயத்தை. இந்த பக்தர்களை இன்னின்னது செய்யுங்கள் என் மனமகிழ்ச்சிக்காக, இன்னின்னது படையுங்கள் என்று நான் கேட்டதுமில்லை — அவர்களாகவே வருகிறார்கள் — அவரவர்கள் மனதுக்குத் தோன்றியபடி ஏதேதோ செய்கிறார்கள். நான் சிவனே! என்று எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டிருக்கிறேன். என் பொறுமை, பெருந்தன்மை, இவைகளைக் கண்டு, இந்த பக்தர்கள், என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற துணிவு கொண்டு,........" கருப்பண்ணரின் தொண்டை அடைத்துக்கொண்டது துக்கத்தால். தேவியின் ஆச்சரியம் அதிகரித்தது. "துணிவு கொண்டு...

சொல்லும் கருப்பண்ணரே! துணிவு கொண்டு..." என்று ஆவலை, வார்த்தைகளாக்கினார் தேவி. ஆத்திரத்துடன் கூறினார் கருப்பண்ணசாமி, "ஒரு அறையிலே போட்டு பூட்டி விட்டார்கள்!"—என்றார். தேவிக்கும் இலேசாகத் திகில் ஏற்பட்டது.

"பூட்டி விட்டார்களா? உன்னையா? பக்தர்களா?"—என்று திகைப்புடன் தேவி கேட்டார்கள்.

"கேட்பதற்கே இவ்வளவு திகில் பிறக்கிறதே தேவியாரே! என்மனம் என்ன பாடுபட்டிருக்கும், என்னை ஒரு அறையிலே போட்டு, பூட்டின போது. நான் என்ன கழனிவேலை செய்யும்கருப்பண்ணனா, சாமி-சாமி—விட்டுவிடுங்க—என்று கதற! நானோ அவர்கள் கூப்பிட்டு வரங்கேட்கும் கருப்பண்ணஸ்வாமி! அவர்களோ என்னையே அறையிலே தள்ளிப் பூட்டுப்போட்டுவிட்டார்கள். நான்என்ன செய்வது!"—என்று கூறி, ஆயாசமடைந்தார் கருப்பண்ணசாமி.

தேவி, உண்மையிலேயே அனுதாபப்படத் தொடங்கினார்கள்.

"கேவலமான நிலைமைதான் இது. பக்தர்கள், உன்னைச் சிறையில் போடுவது போல அல்லவா செய்துவிட்டிருக்கிறார்கள்" என்று பேசினார் சோகமாக.

"தேவீ! உன் காதிலே, அவர்கள் அப்போது போட்ட கூச்சல் விழுந்திருந்தால் தெரிந்திருக்கும் அவர்களின் போக்கும் குணமும். போட்டுப் பூட்டடா, என்ன நடந்துவிடுதுன்னு பார்க்கலாம்" என்று ஒருவன் கொக்கரிக்கிறான்.

"பெரிய பூட்டு கொண்டுவா" என்று கூவுகிறான் ஒருவன்.

"அலிகார் பூட்டு வேண்டுமா" என்று கேட்கிறான் இன்னொருவன். இவ்வளவு கூச்சல், துணிவு! போட்டுப் பூட்டுங்க, பார்க்கலாம், எவன் வந்து என்ன செய்து விடுகிறான்..." என்று கூவி, தேவீ! என்னை ஒரு பெரிய அறையிலே போட்டு பூட்டி விட்டுப் போயேவிட்டார்கள்.

வெளியே சிரிக்கிறார்கள் — இனி பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று!—நான் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன்—என்னைப்போட்டு பூட்டிய 'பாவிகள்' சிரிக்கிறார்கள்! நான் கேட்கலாமா அவர்களைப் பார்த்து, இதென்ன அக்ரமம்— திறந்துவிடுங்கள் என்னை — இல்லையானால் மூக்கிலும் வாயிலும் இரத்தம் வரச்செய்வேன் கைகால்களை முறித்துப் போட்டுவிடுவேன்" — என்று பேசலாமா! அவர்களோ பக்தர்கள்! நானோ அவர்களால் வணங்கப்படும் சாமி! தேவீ! மனம் எவ்வளவு பதறி இருக்குமென்று யோசியுங்கள்" — என்றார் கருப்பண்ணர்.

"கருப்பண்ணரே! அது கிடக்கட்டும், ஏன் பூட்டினார்கள்...என்ன செய்தீர்?"—என்று கேட்டார் தேவியார், கருப்பண்ணர் சிரித்துவிட்டு, "நானா, என்ன செய்தேனா, அவர்கள் என் எதிரே இருந்துகொண்டு சொல்லிவந்த புளுகுகளை எல்லாம் கேட்டுச் சகித்துக்கொண்டிருந்தேனே, அதுதான் நான் செய்த தவறு. போதும் புளுகாதீர்கள் என்று ஒரு தடவையாவது ஒரு பக்தனையாவது கண்டித்திருந்தால், அவர்களுக்கு அன்று அவ்வளவு துணிவு வந்திருக்காது." என்றார் கருப்பண்ணர்.

"உன்னை ஒரு தனி இடத்தில் போட்டுப் பூட்டவேண்டிய அவசியம் என்ன வந்தது" என்று மீண்டும் கேட்டார் தேவியார்.

சலிப்பும் வெறுப்பும் கலந்த குரலிலே கருப்பண்ணர் சொன்னார், "ஏன் பூட்டி வைத்தார்கள் என்று கேட்கிறீர், தேவீ! நான் அவர்களின் "சாமீ"யாம், அதனாலே என்னை வேறே சில பக்தர்கள் கொண்டு போகாமலிருப்பதற்காக, என்னைப் போட்டு பூட்டிவைத்தார்கள். அவ்வளவு 'பக்தி' என்னிடம், வேறு எந்த பக்தனிடமும் நான் பேசிவிடக் கூடாது. அப்படி ஒரு எண்ணம்—" என்றார் கருப்பண்ணர்.

"இதென்ன பைத்யக்காரத்தனமான எண்ணம்!" — என்று தேவி கேலியாகப பேசினார்கள். "இவர்கள் கண்டதையும் கடியதையும் வேகாததையும் பழுக்காததையும் தின்று வயிற்றுப் போக்கு ஏற்பட்டால், என்னை வந்து கேட்கிறார்களே, தேவி! கருப்பண்ணஸ்வாமீ! என்னைக் காப்பாற்றுன்னு. பைத்யக்காரத்தனம்தானே அது. அதுபோல இதுவும் ஒரு பைத்யக்காரத்தனம். உண்மையைச் சொல்லப் போனா, தேவீ! அப்படிப்பட்ட பைத்யக்காரத் தனத்தை நாம் வளரவிட்டது தவறு இல்லையா? என் விஷயத்தைக் கேள், தேவீ! இந்தப் பக்தர்களுக்கு, நான் தங்களுடைய "சாமி", வேறு யாரும், தங்களுடையதுன்னு 'பாத்யதை' கொண்டாடினாலும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்கிற எண்ணம் ஏற்பட்டது. அதற்கு தகுந்தபடியான நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. நான், நீ, என்று போட்டி போட்டுக்கொண்டு பக்தர்கள் கூட்டம் பெருகுவது கண்டு எனக்கும் பெருமையாகத்தான் இருந்தது. என் போறாத வேளை, என் பக்த கோடிகள், இரண்டு 'கோஷ்டி'யாகப் பிரிந்து அவர்களுக்குள்ளே தீராத பகை ஏற்பட்டுவிட்டது. அவர்களுடைய பகை எனக்குப் பெரிய ஆபத்தாக வந்துசேரும் என்று நான் கண்டேனா—நான் என் வேலையைக் கவனித்துக்கொண்டு இருந்தேன். வழக்கமாக எனக்கு நடத்துகிற உற்சவத்தை நடத்தினார்கள் — எனக்கு மகிழ்ச்சி—தேரும் திருவிழாவும் வீண் வேலை என்று ஊரூருக்கும் போய்ச் சிலபேர் பேசிக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள் பேச்சிலே மயங்கி, எங்கே என் பக்தர்கள் இந்த வருஷம் உற்சவத்தை நடத்தாமல் இருந்துவிடுகிறார்களோ என்று எனக்கு இலேசாகப் பயம். அவர்கள் உற்சவத்தை வழக்கப்படி நடத்த முன்வரவே நான் மகிழ்ச்சி அடைந்தேன்—எவ்வளவு பிரசாரம் நடைபெற்றாலும் நமது செல்வாக்கு போய்விடவில்லை என்று எண்ணிப் பூரித்துப்போனேன். வருஷா வருஷம் வைகாசி மாதம் உற்சவம் நடத்துவார்கள் எனக்கு — கருப்ப உடையார் தலைவர், உற்சவம் நடத்திய பக்தர் குழாத்துக்கு வழக்கப்படி ஊர்வலமாக என்னை அழைத்துச் சென்றார்கள். "பயல்களே!

"ஞாயிறு"

[மாதமிருமுறை]

ஆசிரியர்

ஏ. சே. [illegible]லன்

மார்ச் திங்களில் வெளிவருகிறது

தனிப்பிரதி அணா இரண்டு.

விற்பனையாளர் தேவை.

"ஞாயிறு" கரந்தை,

(A) தஞ்சை.

பகுத்தறிவு—சுயமரியாதை என்று கத்திக்கொண்டிருக்கிறீர்களே—பாருங்களடா, பக்தர்கள் எனக்கு உற்சவம் கொண்டாடுவதை!" என்று கூறிட எண்ணினேன்—ஆனால் அந்தப் பயல்கள் ஒருவன் கூடக் காணோம் — எங்காவது 'மஹாநாடு' போட்டிருப்பான்கள் போலிருக்கு. சந்தோஷமாகப் பவனி வந்தேன். எப்போதும்போல என்னைக்கொண்டு போய் மண்டபத்தில் கொலுவிருக்கச் செய்தார்கள். பக்தர்கள் என்னை வந்து தரிசிக்க அதுதானே நல்ல ஏற்பாடு. நானும் மண்டபத்தில் கெம்பீரமாக வீற்றிருந்தேன்.

பக்தகோடிகள் இரண்டு 'கோஷ்டி'யாகி இருந்தனர் என்று சொன்னேனல்லவா—உற்சவம் செய்தது ஒரு கோஷ்டி—கருப்ப உடையார் கோஷ்டி—மற்றொரு கோஷ்டி, பிச்ச உடையார் நடத்தி வந்தார்—அந்தக் கோஷ்டியும் என் பக்தர்கள் தான். அந்த இரண்டு 'கோஷ்டி'க்கும்தான் பகை, இரண்டு கோஷ்டிக்கும் என்னிடம் பகை ஏற்படக் காரணமே கிடையாது.

மண்டபத்தில் இருந்த என்னை மீண்டும் கோயிலுக்கு அழைத்துப் போகக் கூடிற்று கருப்ப பக்தர் கோஷ்டி.

"தூக்காதே! எடுக்காதே!" என்று கூவிற்று பிச்ச பக்தர் கோஷ்டி.

"நீங்கள் யாரடா, தடுக்க—எங்க கருப்பண்ணசாமிக்கு நாங்கள் உற்சவம் நடத்துகிறோம்—எங்கள் இஷ்டப்படி— நடத்துகிறோம—உலா முடிந்தது, கொலு முடிந்தது—கொண்டு போகிறோம் கோயிலுக்கு—நீங்கள் யார் தடுக்க?" என்று கருப்ப பக்தர் கோஷ்டி பதில் கூறிற்று.

"தொடாதே!"—என்று அதட்டிப் பேசினர் பிச்சை பக்தர் கூட்டத்தினர்.

"தூக்கு! தூக்குடா!" என்று அதிகாரக் குரலில் பேசினர் கருப்ப பக்த கோஷ்டியினர்.

"வெளியே கிளப்பினே—கொலை விழும்—ஆமாம்—"

"சூரப் புலிகளோ! தூக்குடா சாமியை!"

"வேண்டாம்—வீணா தொல்லைப் படாதிங்க"

"கருப்பண்ணசாமியை நாங்க எங்க இஷ்டப்படி தூக்கிக்கிட்டுப் போவோம்."

"கருப்பண்ண சாமி, எங்க சாமிடா!"

"இல்லே, எங்க சாமிடா, கருப்பண்ணசாமி"

"கையை வெட்டிவிடுவேன்"

"காலை ஒடித்துவிடுவோம்"

தேவி! இரு பிரிவும் இப்படி கொக்கரித்தன — நான் மண்டபத்திலே கொலு இருக்கிறேன்! என்னைக் கொண்டுபோய் பழயபடி கோயிலில் சேர்த்து விடவேண்டும் என்று ஒரு பிரிவு முயற்சி செய்கிறது—இன்னொரு பிரிவு, கூடாது என்று கூறித் தடுக்கிறது. நான் என்ன செய்வது! இரு பிரிவினரும் என் பக்தர்கள்! நான், யார் பக்கம் சேரமுடியும்? இரண்டு பிரிவும் சண்டை போட்டுக் கொள்ளட்டும், நாம், கோயிலுக்குப் போய்த் தொலைப்போம் — இரு பிரிவின் தயவும் வேண்டாம், என்று எண்ணம் பிறந்தது —! ஆனால் எப்படிக் கோயிலுக்குப் போவது! நான் திண்டாடிப் போனேன், தேவி! திகைத்துப் போனேன்.

பட்டிக் காடுகளிலே, கலியாணத் தகராறு கிளம்பிவிட்டால், பெண்ணைக் கொண்டுவா என்று ஒரு கூட்டம் கூவ, பெண்ணைக் கொண்டு போகாதே என்று மற்றொரு கூட்டம் கூவ, இரண்டு கூட்டத்தின் சச்சரவிலே சிக்கியபெண், புலம்புவது உண்டு. என் நிலை அதுபோலாகி விட்டது. ஆனால் நான் புலம்பலாமா! நானே சாமி! என்னை இந்தக் கொடுமைக்கு ஆளாக்கினவர்களோ என்னைப் பூஜிக்கும் பக்தர்கள்! என்ன செய்வது நான்!

"கோயிலிலே கொண்டுபோய் ஸ்வாமியைச் சேர்ப்பது தான் நியாயம்" என்று கருப்ப பக்தர் குழாம் கூறியபடி இருந்தது. பிச்சை பக்தர் குழாமோ, "விவகாரத்தைத் தீர்த்து விட்டு, சாமியைத் தொடு—விவகாரம் பைசல் ஆகாததற்கு முன்னே, தொட்டா, விடமாட்டோம்" என்று கூறுகிறது.

அட, பாவிகளா! உங்களுக்குள்ளே, ஏதாவது விவகாரம் இருந்தா என்னை ஏன் அநுக்காரச் சிரமிவு செய்கிறிங்க. நான் கோயிலுக்குப் போன பிறகு, உங்க விவகாரத்தை பேசி, பைசல் செய்து கொள்ளக் கூடாதா? என்னை இப்படி அவமானப்படுத்துவது முறையா—என்று கேட்க விருப்பம் தான்—எப்படிக் கேட்க முடியும்!

ஊரிலே இதற்குள்ளே பேசப்பட்ட பேச்சை, கேட்டுச் சகிக்க முடியல்லே.

"சாமி புறப்படலே இன்னும்?"

"இல்லே—சாமியைவிட மாட்டேன்னு சொல்றாங்களாம்"

"ஏனாம்—யாராம்—"

"அவுங்கதான் பிச்சய்யா"

"ஏனாம்"

"என்னமோ விவகாரம் இருக்காம், கருப்பையாவோடே அந்த விவகாரத்தைப் பைசல் செய்து சாமியைத் தொடு இல்லேன்னு விட மாட்டோம்னு பேசறாங்க"

"சாமி, மண்டபத்திலேதான் இருக்கா?"

"ஆமாம்—பாவம்—மண்டபத்திலேயே தான் இருக்கு"

"இந்நேரம் கோயில் போய்ச் சேர்ந்திருக்குமே."

"ஆமாம், விட்டாத்தானே"

"இவர்களுக்குள்ளே சண்டைன்னு சாமி, என்ன பண்ணிச்சாம், பாவம், அதை மண்டபத்திலே காக்கப் போட்டு வைக்க வேணுமா!"

இப்படித் தாய்மார்கள் பேசுகிறார்கள்,

சிறுவர்களோ, "டேய்! சாமி ஆப்பிட்டுக்கிச்சி, மண்டவத்திலே" என்று கூவித் தொலைக்கிறார்கள்.

தேவி! கோயில் நிர்வாக சம்பந்தமாக, அந்த இரண்டு பிரிவுக்குள் ஏதோ தகறாராம் — அதற்காக என்னை இந்தக் கோலப் படுத்தினார்கள்.

கோயில் தகராறு தீர்க்கப்பட்டாலொழிய, என்னை மண்டபத்தை விட்டு எடுத்துச் செல்லக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டதுடன், "கணக்கு வழக்கு முடிந்தாலொழிய கருப்பண்ணசாமியைக் கோயிலுக்குக் கொண்டுபோகவிடப் போவதில்லை" என்ற தீர்மானமாகச் சொல்லிவிட்டு, தேவி! என்னை மண்டபத்துக்குள்ளே விட்டு விட்டு, கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள், பிச்ச பக்தக் கூட்டம். நான் உள்ளே அடைபட்

டுக் கிடந்தேன் — மண்டபத்தைப் பூட்டிவிட்டார்கள். உற்சவத்துக்கு ஆசைப்படாமலிருந்தால், நிம்மதியாகக் கோயிலிலே இருந்திருக்கலாம் — இப்போது, மண்டபத்திலே போட்டு பூட்டிவிட்டார்கள்.

"டோய்' சாமி, உள்ளே இருக்குடா—பூட்டிப் பூட்டாங்க" என்று கூவிக் குதிக்கிறார்கள்.

"பாவம், கருப்பண்ணசாமியைப் போட்டு பூட்டி விட்டான்க!" என்று தாய்மார்கள் முகவாய்க் கட்டையில் கை வைத்தபடி பேசுகிறார்கள். நான் உள்ளே சிறை வைக்கப்பட்டேன். என்னை இந்தச் சதிக்கு ஆளாக்கிய கருப்ப டக்தர், என்னைச் சிறை மீட்க அரும்பாடு படலானார், 'இந்துமத பரிபாலன போர்டாரா'மே அவர்களிடம் முறையிட்டாராம்.

"சாமியை மண்டபத்திலே போட்டு பூட்டிவிட்டார்கள்—கோயிலிலே சாமி இல்லை — சாமியை வெளியே கொண்டுவந்து கொடுக்க வேணும்"னு கேட்டாராம். போர்டார் இதுக்கா இருக்காங்க! ஏதோ கணக்கு வழக்கு சரியா இருக்கா இலலையான்னு பார்க்கத்தானே — அந்தக் காரியத்தை ஒழுங்காச் செய்யவே அவர்களுக்கு நேரம் போதறதில்லே—என்னைப் போட்டு பூட்டி விட்டா, அதற்காக ஓடோடியா வருவாங்க! போப்பா! போயி, போலீசிலே சொல்லுன்னு யோசனை கூறி விட்டாங்க. ஓடியிருக்கிறார் போலீசுக்கு. நான் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன். போலீசிலே என்னென்ன பேசினாங்களோ தெரியல்லே! என்ன பேசியிருக்கப் போறாங்க, கேலிதான்! கடைசியிலே லால்குடி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒரு போலீஸ் படையோடு வந்து, பூட்டை உடைத்து, என்னை வெளியே விட்டார்! அந்த, நல்ல மனுஷன் இந்த உபகாரம் செய்ய வந்தாரே, அவரைச் சும்மா விட்டாங்களா, "எப்படி பூட்டை உடைக்கலாம்—பார், என்ன செய்கிறோம்—எங்க கருப்பண்ணசாமியை நாங்க பூட்டி வைக்கிறோம் மாட்டிவைக்கிறோம் எங்க இஷ்டப்படிச் செய்கிறோம், நீ யார் கேட்க — பூட்டை உடைக்கலாமா?" அப்படி இப்படின்னு, அவரைச் சூழ்ந்து கொண்டாங்க. அவர் என்ன, என்னைப் போலவா, வாயை மூடிக்கிட்டுக்கிடப் பாரு—மரியாதையா நடங்க-சட்டப்படி நடக்கவேணும்னு சொல்லியிருக்காரு—கேட்கல்லே, போலீசாரைக் கூப்பிட்டாரு, போடுங்கடா பூஜைன்னு உத்திரவு போட்டாரு, தூக்கினாங்க தடியை, அடிச்சி விரட்டினாங்க. தேவி! அப்பத்தான் என் மனம் கொஞ்சம் நிம்மதியாச்சி. பக்தனுங்கன்னு பேர் வைத்துக் கொண்டு, என் எதிரே கன்னம் கன்னம்னு போட்டுக்கொண்டு, கற்பூரம் கொளுத்திக் காட்டிக்கிட்டு, இருக்கிறவங்க, நீதி நியாயத்தைக் கவனிக்காமல், ஈவு இரக்கம் காட்டாமல், பழி பாவத்துக்கு அஞ்சாமல், சாமியை இந்த அலங்கோலப் படுத்தலாமான்னு யோசிக்காமே, நெஞ்சழுத்தத்தோட, என்னைப் பூட்டிப் போட்டுவிட்டாங்க – கேவலப்படுத்திவிட்டாங்க. நான் என்ன செய்ய முடிந்தது? எந்தப் புண்ணியவான் வந்து வெளியே விடுவாரோ—எத்தனை காலம் இங்கே அடைபட்டுக் கிடக்க வேணுமோ—எவனவன் கேலி செய்கிறானோ—ன்னு எண்ணி எண்ணி ஏக்கபட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளையா லால்குடிக்காரர், தங்கமான மனஷன், அவர் புள்ளெ குட்டிக சுகமா இருக்க வேணும், என்னை வந்து வெளியே கொண்டு வந்து சேர்த்தாரு—தேவி! இந்தப் பாடுபடுத்தி விட்டாங்க பக்தர்னு சொல்லிக் கொள்கிறவங்க- அதனாலேதான் எனக்கு பயம் ஏற்பட்டுவிட்டுது-நிஜமாச் சொல்றேன், இனி இந்த பக்தர்களை நம்பிப் பிரயோஜனமில்லே — ஏதோ பூஜை செய்கிறாங்களென்னு பூரிப்படையறதிலே அர்த்தமிலலே. இனி நமக்கு அவங்க தயவு வேண்டாம்--சகவாசமே கூடாதுன்னுதோணிவிட்டுது" —என்று கருப்பண்ணசாமி தன் கதையைக் கூறி முடித்தார். தேவியும், கதையைக் கேட்டுக் கலக்கமடைந்தார்கள்.

"ஆமாம்! இனி இந்தப் பக்தர்களை நம்பக்கூடாது" என்று தேவியும் தீர்ப்பளித்தார்கள்.

"நாம் இரண்டு பேரும் மட்டும் தீர்மானித்தால போதுமா தேவி! நம்ம கூட்டம் பெரிதல்லவா? எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி, இனி இந்தப் பக்தர்களிடம் நாம் சிக்கிச் சீரழிவுபடக்கூடாது. பக்தர்கள் வேண்டாம்"—என்று தீர்மானம் நிறைவேற்றினால்தானே கலலது என்றார் கருப்பண்ணசாமி.

"ஆமாம். கருப்பண்ணரே! பக்தர்களால், நம்மவர்களுக்கு ஏற்பட்டு வரும் சீரழிவுகளையும், எத்தர்கள் ஏமாளிகளை ஏய்க்க நம்மைக் கருவியாகக் கொள்வதையும் விளக்கமாகக் கூறி, நமது நண்பர்களுக்கும் இனி இப்படிப்பட்ட இடைஞ்சல் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளத்தான் வேண்டும். நாம் இதற்காக ஒரு தனி மாநாடு கூட்டிவிட வேண்டியதுதான். இனிப் பொறுக்க முடியாது. நான் வரவேற்புக் கழகத்துக்குத் தலைமை தாங்கிவிடுகிறேன்- திறப்பு விழா நீ நடத்திவிடு—தலைமைக்கு யாரை அழைக்கலாம்......" என்று தேவியார், ஆர்வத்துடன் கேட்டார்கள்.

"யாரை அழைக்கலாம்?"-என்று கருப்பண்ணசாமியும் யோசிக்கலானார்!

[இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் லால்குடிக்குச் சமீபத்தில உள்ள புஞ்சை சாங்குடி என்ற கிராமத்தில், இரு கட்சிகள் ஏற்பட்டு, கருப்பண்ணசாமியை பண்டபத்தில் போட்டு பூட்டிவிட, போலீஸ் உதவியுடன் பூட்டு உடைக்கப்பட்டு, சாமி கோயிலில் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டார் என்ற செய்தி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில், ஆகஸ்ட் 22ல் வெளிவந்தது. அந்த உண்மைச் சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு தீட்டப்பட்டது இந்தக் கற்பனை.]

நாஞ்சில் காணிக்கை
கழக கட்டிட நிதிக்கு
ரூ. 1000

12—1 51-ல் நடந்த மாநாட்டு வரவேற்புக்குழுக் கூட்டத்தில, நாஞ்சில் மாவட்ட மாநாட்டுவரவுசெலவு கணக்கு பரிசீலிக்கப் பட்டது.

நன்கொடை, டிக்கட் விற்பனை மூலமாக வரவு ரூ.	8471—10—0
மொத்த செலவு	6976—0—3
நீக்கியிருப்பு	1495—9—9

இந்தத் தொகையில் நாஞ்சில் மாவட்ட சார்பில் தி. மு. க. தலைமை நிலையக் கட்டிட நிதிக்காக ரூ 1000 பொதுச் செயலாளருக்கு அனுப்பப் பட்டது.

3-ம் பக்கத் தொடர்ச்சி

ரஷ்யாவுக்கு எதிராக, ஒருபலமான கூட்டு முன்னணி ஏற்படுத்துவது குறித்து முடிவு செய்யக் கூட்டப்பட்டதே காமன்வெல்த் மாநாடு.

மேற்படி எண்ணத்துடனேயே மாநாடு, பிரிட்டனால் கூட்டப்பட்டது. ஆனால், என்னமோ, முற்றுப் பெறவில்லை! அங்கும் இந்தியா, சமாதானத்தூதுவனாகவே பேசியது!

எனவே, அமெரிக்காவின் மனதில் இப்போது ஆத்திரம் அரும்பி இருக்கிறது.

கம்யூனிசத்தை எதிர்த்தழிக்க, ஆசியாவில் இருநாடுகளையே பெரிதும், அமெரிக்கா நம்பியிருந்தது ஒன்று சீனா இன்னொன்று இந்தியா.

ஆனால், சீனாவோ — கம்யூனிஸ்ட் நாடாகிவிட்டது. எனவே, அமெரிக்கா, தனது கம்யூனிச எதிர்ப்புக்குப்பெரிதும் இந்தியாவையே நம்பியது. 'அது தருகிறேன் - இது தருவேன்' என்று ஆசை காட்டியது. ஆபத்பாந்தவன் போல நடித்தது.

அமெரிக்காவின் நம்பிக்கையை அழிக்கும் வகையில் இந்தியா இப்போது கொரியத் தீர்மானத்தை எதிர்ப்பதும், சீனாவை ஆதரிப்பதுமாக நடந்துகொள்வது அமெரிக்காவுக்குப் பிடிக்கவில்லை.

இந்தியா-கொரியத் தீர்மானத்தை எதிர்த்ததன் நோக்கம், மூன்றாவது உலகப்போருக்கான சூழ்நிலைவளரக் கூடாது என்பதுதான்.

போர் கூடாது; சமாதானம் வேண்டும் என்பதில் இந்தியப் பிரதமர் நேரு--இப்போது, அதிக அக்கரை கொண்டுள்ளார்.

அக்கரைக்கான காரணம் எதுவாயினும், இது குறித்து நேருவை எவரும் பாராட்டாமலிரார்!

துயரத்தில் மூழ்கியிருக்கும் நாடுகள், இன்னொரு போர் ஏற்படுவதைத் தவிர்க்கவே விரும்பும். ஆனால் அமெரிக்க முதலாளித்துவமோ, போர் சிருஷ்டிக்கப் படுவதிலேயே நாட்டங் கொண்டிருக்கிறது. அதற்கான ஆள் திரட்டுவதிலும் ஆயுதங்களிலும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியா முதலான நாடுகளுக்கு உதவுவோம், பிற்பட்ட நாடுகளுக்கு வேண்டிய பணஉதவி தருவோம் என்றெல்லாம் பசப்பிப் பேசியது அந்தந்த நாடுகளையெல்லாம் தனக்குச் சாதகமாக ரஷ்யாவின் எதிரிகளாகத் தயார் செய்யவேண்டும் என்பதன் விளைவுதான்.

ஆகவேதான், இந்தியா முதலான நாடுகளைப் புகழ்ந்து, போற்றியது; நேருவை அழைத்தது, விருந்து வைத்தது — முதலாய ஏற்பாடுகளெல்லாம்.

இப்போது. இந்தியா சுயபுத்தியோடு, நடக்க ஆரம்பித்திருப்பது அமெரிக்காவுக்கு அதிர்ச்சியைத் தந்திருக்கிறது.

தனது சொற்படி கேட்கவில்லையே என்று ஆத்திரங்கொண்டிருக்கிறது.

அமெரிக்க அரசாங்கமட்டுமல்ல நேற்றுவரை போற்றித் துதிபாடிய அமெரிக்கப் பத்திரிகைகள் கூட இந்தியாவைத் தூற்றத் துவங்கியிருக்கின்றன.

"பணஉதவி" என்ற பெயரால், பிற நாடுகளைத் தன் கூடாரத்தில் சிக்கவைத்த அமெரிக்கா இப்போது அதே 'பணபாணத்தை'க் காட்டி மிரட்டுகிறது!

அந்த மிரட்டலின் காட்சிதான்- கோதுமை தர தயங்குவது!

"என் சொற்படி நீங்கள் கேட்டால், விரும்பியதெல்லாம் செய்வேன் இல்லையென்றால் எதுவும் தரமாட்டேன்" என்று பிற நாடுகளுக்கு விடுக்கும் ஒரு எச்சரிக்கைக் காண்டமே இப்போது நடப்பது.

"இதோ பார்! நீ முரண்டினை— உனக்கு 'முடியாது' என்று சொன்னேன். தென் ஆப்ரிக்கா, என் சொற்படி, கொரியத் தீர்மானத்தை ஆதரித்தது. அதற்குப் பணம் தந்தேன்—உதவினேன்" என்று காட்டவே, தென் ஆப்ரிக்காவுக்கு 380 கோடி ரூபாய் தந்திருக்கிறது, அமெரிக்கா.

பண பாணம் கொண்டு ஏழைகளின் குரலை ஒடுக்கும் எதேச்சாதிகாரச் சொரூபமே — முதலாளிகளுடையது.

அந்த முதலாளித்துவப் போக்கை, இந்த கோதுமைச் சம்பவம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இந்தப் பாடத்தை, முதலாளித்துவ மோகனப் புன்னகையில் மூழ்கிக் கிடக்கும் இந்தியா உணரவேண்டும்—அப்போதுதான் சுதந்திரம் நிலைக்கும் தொல்லையில்லா வாழ்வு வளரும்!

✻

எனது நன்றி

✻

26—1—51 வெள்ளிக் கிழமையன்று தஞ்சைக்கு வந்த மத்திய சர்க்கார் மந்திரி ஆச்சாரியாருக்கு கருப்புக்கொடி காட்டுவதற்காக நம் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் கருப்புக் கொடி பிடிக்க வந்திருந்து மிக வெற்றிகரமாக நடத்திக் கொடுத்த கழக முன்னணி வீரர்களுக்கும், தலைமை வகித்து நடத்திய தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. கே. வேலன், ஆகியோருக்கும், மற்றும் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடக்க ஒத்துழைத்த இதர தோழர்களுக்கும், கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பெரும் திரளாக வந்து அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்த பொது மக்களுக்கும், மாவட்டக் கழகத்தின் சார்பில் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே. கே. நீலமேகம்,
செயலாளர், த. மா. தி. மு. க.

தஞ்சை மாவட்ட தி.மு.க செயற்குழுக்கூட்ட அழைப்பு

4—2—51 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மாயவரம் பெரிய கடைத்தெரு, ஆர். பழனிச்சாமி பழக்கடைமாடியில் தஞ்சைமாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி முடிவு செய்யப்படும்.

செயற்குழு உறுப்பினர்களும் மற்றும் கழக முக்கியஸ்தர்களும் இதையே அழைப்பாகக்கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. தஞ்சை மாவட்ட தி. மு. க. மாநாட்டை நடத்த முடிவு செய்து வரவேற்புக்குழு அமைத்தல்.
2. எழுத்துரிமை போர் நடத்த முடிவு செய்தல்.

கே. கே. நீலமேகம்,
செயலாளர்,
த. மா. தி. மு. க.

'தடியாட்சி'

குடியாட்சி தினத்தில் 'தடியாட்சி' நடந்திருக்கிறது-நல்லாட்சி வேண்டுமென்று தங்கள் வாழ்நாள் முழுவதும் செலவிட்ட தோழர்கள் கண்ணீர் விட்டுக் கதறவேண்டிய நிகழ்ச்சி சென்னையிலே நடந்துள்ளது!

ஜன 26 — இந்திய, குடியாட்சியான தினம் — அதற்குக் கொண்டாட்டங்கள், கூட்டங்கள், கொடியேற்றங்கள் — உண்டென்று கூறிய துண்டு — ஆனால் சென்னையில் தடிகொண்டு, குடியாட்சித் திருவிழா கொண்டாடி விட்டார்கள்!

வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு அறிகுறியாக, சென்னையில் திராவிட கழகத்தாரால் நடத்தப்படும் வடநாட்டுக் கடை மறியலில் பெரியார் ஈ. வே. ரா.வே கலந்துகொண்டார்.

ஜன 26-ம் நாள் மாலை 5-மணியளவில் சென்னை, ஆரிய பவான் ஓட்டலுக்கு முன் பெரியார் வந்து மறியல் செய்தார். தமது தள்ளாத வயதிலும், வடநாட்டார், திராவிடத்தைத் தேய்வைக்கும் 'திருட்டுத்தனத்தை' எதிர்ப்பதற்காகத் தாமே, மறியலைத் தலைமை தாங்க முன்வந்தார். அவரது நாட்டுச் சேவை புணர்ச்சியை நாம் மனமார பாராட்டுகிறோம்—வாழ்த்துகிறோம்!

அவர் ஐந்து நிமிடங்கள் பேசினார். அதற்குள், போலீசார், அவரை, போலீஸ் 'வானில்' ஏற்றிச் சென்றனர்.

கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் ஆரவாரித்தனர் — கையொலி எழுப்பினர்.

பெரியாருடன் வந்த மற்ற தொண்டர்களையும் வேறொரு வண்டியிலேற்றிச் சென்றனர்.

சிந்தாதிரிப்பேட்டை போலீஸ் நிலையத்திற்குக் கொண்டு போய் பிறகு, பெரியாரை வீட்டிலே கொண்டு விட்டுவிட்டனர்.

இந்த ஆட்சியாளர் திட்டமில்லாது தட்டுத் தடுமாறி, ஆட்சியை நடத்துகிறார்கள் என்று அடிக்கடிக் கூறிவருகிறோம் நாம் — ஆட்சிமுறைகளிலே ஆயிரங்கோணல்கள் — உணவுத் துறையில் நினைத்து நினைத்து மாற்றங்கள் - நூலைப்பற்றி நிமிடத்திற்கொரு விளக்கங்கள் — மதுவிலக்குத் திட்டத்திற்கு ஆளுக்கொரு வியாக்கியானம் - ஜமீன்தாரி முறை ஒழிப்பிற்கு விதவிதமான அர்த்தங்கள் — இனாம்தாரிக்கு எத்தனை வகையான விசித்திர பொழிப்புரைகள் — அப்பப்பா, திட்டமில்லாத அரசாங்கத்தின் சீரழிவிற்கு, சென்னை அரசாங்கமே பெரிய சாட்சியாகும்!

ஆளுவதிலேதான் இத்தனை அலங்கோலங்கள் என்று நினைத்துவிடாதீர்கள் — அடக்குவதிலேயும், அவர்களுக்குத் திட்டமும் இல்லை — திட்டமும் இல்லை.

வடநாட்டுச் சுரண்டலைத் தென்னாட்டார் தடுக்க முனைந்துவிட்டார்கள் என்பதைக் காட்ட அடையாள மறியல் செய்து வருகிறார்கள் திராவிட கழகத்தார். இதுவரையிலே மூன்றுக்கு மேற்பட்ட தோழர்கள் சிறைபடுத்தப் பட்டார்கள் அவர்களையெல்லாம் நாம் பாராட்டுகிறோம்.

ஆனால், அவர்களெல்லாம், ஆளுக்கொரு வகையான தண்டனை அடைந்திருக்கிறார்கள். செய்த 'குற்றம்' ஒன்று-தண்டனையோ, விதவிதமானது! எச்சரிக்கப்பட்டனர்-பிறகு வழக்கு பதிவு செய்யப்பட்டனர்-ஒரு வாரமுதல் ஒரு மாதம்வரை சிறைத் தண்டனை அடைந்திருக்கின்றனர்.

குடியாட்சி தினத்தில் பெரியாரைப் பிடித்தனர் — விட்டனர்!

நாடாள்வோரின் திட்டமில்லா போக்கைக் காண நாம் திகைக்கவில்லை — சிரிக்கிறோம். ஏனெனில் அவர்கள் எதைச் செய்வது என்று புரியாது திணறுகிறார்கள்!

திராவிட இயக்கத்தின் செல்வாக்கைக் கண்டு பொறாமைகொண்ட 'சிலதுகள்' சென்னையிலே மறியல் நடந்த இடத்தில் குழப்பம் ஏற்பட வழி வகுத்து, அதன் மூலம் குடியரசு தினத்தை, தடியரசு தினமாக மாற்றிவிட்டதைக் காண வருந்துகிறோம். அத்தகைய இழிமனங் கொண்டோரின் கீழ்மைச் செயலைக் கண்டிக்கிறோம்.

குடியாட்சி, தடியாட்சியாக மாறியதைக் காண நாணவேண்டும் அவர்கள் — தலையைத் தாழ்த்திடவேண்டும், ஆளவந்தார். அவர்கள் வெட்கப் படடாகவேண்டும்.

செங்கற்பட்டு மாவட்டத் தோழர்களுக்கு!

செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக மாநாட்டு வரவேற்புக் குழு கூட்டம் பிப்ரவரி 4-ந் தேதி ஞாயிறு காலை 10-மணிக்கு காஞ்சி 'திராவிட நாடு' அலுவலகத்தில் நடைபெறும். அதுபோது மாநாட்டு கணக்கு விபரங்கள் பரிசிலனை செய்யப்படும். ஆகவே, வரவேற்புக் குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

சி. வி. எம். அண்ணாமலை,
வ. க. தலைவர்.

சே. கோ. பெருமாள்,
டி. சபாபதி,
செயலாளர்கள்.

மாவட்ட செயற்குழு கூட்டம்

செங்கற்பட்டு மாவட்ட செயற்குழு கூட்டம் 4-2-51 ஞாயிறு மாலை 4 மணிக்கு காஞ்சி 'திராவிட நாடு' அலுவலகத்தில் நடைபெறவிருப்பதால், எல்லா உறுப்பினர்களும் வருகை தருமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன். மாவட்ட பிரச்சாரப் படை பற்றியும் மற்றும் பல பிரச்னைகள் குறித்தும் ஆலோசனை நடைபெறும்.

வணக்கம்.

சி. வி. எம். அண்ணாமலை
செயலாளர்.

மகிழ்ச்சி.

நமதியக்க முன்னணி வீரர் திருவாரூர் மு. கருணாநிதி அவர்களின் துணைவியார் 30. 1. 51 அன்று ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தார்கள் என்ற செய்திகேட்டு மகிழ்கிறோம்

அதுவல்ல, நமது பாதை

ஆசிரியர் அலறினர்! அரசாங்க மாளிகைக்குச் செய்தி அனுப்பினர். 'அவசரம் உடனே செல்க' என்று விசேட நிருபருக்கு உத்திரவு பிறப்பித்துவிட்டு ஓடினர். "ஒரு செய்தி தெரியுமோ? துணைபிரதமரைத்தூக்கிச்செல்லப்போகிறார்களாம்! இப்போதுதான் செய்தி வந்தது" என்று மந்திரிமார்களைக் கூப்பிட்டுபேசினர்-டெலிபோன்மூலம்.

அதிகாரிகள் பறந்தனர். போலீஸ் படைகள் விரைந்தன—பாதுகாப்பு, தற்காப்பு என்று கூறிக்கொண்டு பல மேலதிகாரிகள் உத்திரவுமேல் உத்திரவுகள் இட்டுக்கொண்டிருந்தனர்.

பிரதம மந்திரிக்கு ஒரே கலக்கம். பத்திரிகாசிரியரை அழைத்தார் — பேசினர்.

"டெலிபோனில் கூப்பிட்டான். யாரோ என்று போனேன். துணைப் பிரதமர் விஜயம் செய்யப்போகிறாராமே என்று கேட்டான். 'ஆமாம்' என்றேன். 'அப்படியானல் தயாராயிருங்கள் — உங்களுக்கு ஒரு நல்ல செய்தி கிடைக்கும்' என்று பதில் சொன்னன்!

"பேசியது யார் என்று தெரிந்ததோ?"

'கேட்டேன — அவன் சொல்லவில்லை. ஆனல் விஷயத்தைமட்டும் விவரித்தான். ஆசிரியரே! துணைப் பிரதமரை நாங்கள் தூக்கிச்செல்லப் போகிறோம — அதற்கான ஏற்பாடுகள் செய்துவிட்டோம' என்று சொன்னன்!!

"அப்படியா?"

"அதோடு நிறுத்தவில்லை! துணைப் பிரதமரைக்கொண்டுபோய்எதாவது செய்துவிடுவோமோ என்று எண்ணவேண்டாம். எதுவும்செய்துவிட மாட்டோம். சர்வ ஜாக்கிரதையோடு, அவருக்கான மரியாதைகளோடு நடத்துவோம் எங்களுக்கு அவர் இங்கு வருவது பிடிக்கவில்லை! அதைத் தடுக்கவே நாங்கள் அப்படிச் செய்ய முடிவு செய்துள்ளோம என்றும் சொன்னன்"

"சர்வ ஜாக்கிரதையாக நடத்துவார்களாமா?"

"ஆமாம்—அப்படித்தான் சொன்னன்."

X X X

துணைப் பிரதமர் இங்கு வருவது; பிடிக்கவில்லை; ஆகவே, அவரை பகிஷ்கரிக்க முடிவு செய்துவிட்டோம். அவர், இங்கு வந்து எந்த விழாவிலும் பங்கேற்பது எங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவரைத் தடுத்து தூக்கிச் செல்லப் போகிறேன், என்று துணிவோடு சொன்னன்.

தகவல் தந்தது ஒரு தனி மனிதனே ஒழிய அவன் தந்தது ஒரு இயக்கத்தன் சார்பில்.

அதுவும் வலிமையும் ஆதரவும் மிகுந்த ஒரு இயக்கத்தின் சார்பில.

எப்படி மந்திரியை அவர்கள் தூக்கிச் செல்லமுடியும் என்று அலட்சியமாக இருக்கவும முடியாது. ஏனெனில் அவர்கள் நினைத்ததைச் செய்து காட்டியவர்கள். தீரர்கள்!

எனவே, ஆசிரியர் மருண்டார்! அமைச்சர்கள் திகைத்தனர்! போலீசார் விரைந்தனர்! எங்கும் ஒரே பரப்பு!

X X X

வரும் மந்திரி எங்களை கட்டி ஆள்பவர்.

அவருடைய கட்டுப்பாட்டில் எங்களது நாடு கிடப்பதை நாங்கள் விரும்பவில்லை.

அவரை நாங்கள் பகிஷ்கரிக்கிறோம்.

ஆகவே, அவர் விஜயம் செய்யும் போது தூக்கிச் செல்லப் போகிறோம்.

துணிவோடு, இத்தகைய திட்டம் தீட்டி, அதை முன்னறிவிப்பாக பத்திரிகாலயத்துக்கும் அறிவித்தனர்.

உதவிப் பிரதம மந்திரிக்கு இத்தகைய "வரவேற்பை" வழங்கப் போவதாகத் திட்டம் தீட்டியது, நாமல்ல. வடநாட்டு மந்திரிகளைப் பகிஷ்கரிக்கும் நமது கழகத்தார், செய்த முடிவல்ல, இது

பிரிட்டனில்—கடந்த 27-ந் தேதி, லண்டனையே கலக்கிவிட்ட சம்பவமாகும் நாம் கூறுவது.

இங்கு ஆச்சாரியார் — டில்லி துணைப் பிரதமர் பவனி வந்த அதே தினம், பிரிட்டிஷ் துணைப் பிரதமர் ஹெர்பர்ட் மாரிசனுக்கு இத்தகைய வரவேற்பு தரப் போவதாக, ஸ்காட்லாந்து விடுதலை இயக்கத்தினர் வெளியிட்டனர்.

லண்டனில் பத்திரமான இடத்தில் பாதுகாவலோடு இருந்த சிம்மாசனக் கல்லை, அண்மையில் இந்த இயக்கத்தினர், களவாடிச் சென்ற சம்பவமும் தெரியும்—மக்களுக்கு.

மேற்படி இயக்கத்தினர், தங்களது ஸ்காட்லாந்திற்கு 'விஜயம்' செய்யவிருந்த துணைப் பிரதமர் மாரிசனை, தூக்கிச் சென்று, அவர் கலந்து கொள்ளவிருந்த விழா முடிந்ததும், திருப்பியனுப்புவதாகத் தகவல் தந்தனர் 'சண்டே—பிக்டோரியல்' என்ற, செய்தித்தாளுக்கு.

இத்தகவலை, அந்த அலுவலகத்துக்கு அறிவித்தபோது, "மாரிசனை சகல மரியாதைகளுடன் நடத்துவோம். ஆனல் அவர் எங்கள் நாட்டுக்கும் அவர் வருவது தேவையில்லை. எனவே அவரை கடத்திச் செல்லப் போகிறோம்.

இது, எங்கள் விடுதலைக் கிளர்ச்சியில—சிம்மாசனக் கல்லை கொண்டு சென்றது போல—நாங்கள் வகுத்துள்ள பல திட்டங்களில் ஒன்றாகும்" என்று, விபரமாக அறிவித்திருந்தனர்.

மாரிசன் — ஸ்காட்லாந்திலுள்ள எடின்பரோ நகரில் நடைபெற்ற கால்பந்து விளையாட்டு விழாவைக் காணவே சென்றார்; இங்கு இந்தியத் துணை பிரதமர் திருவையாறு சங்கீத விழாவுக்கு டில்லியிலிருந்து வந்தது போல!

அங்கு, அவரை "வரவேற்க" ஸ்காட்மக்கள் மேற்படி திட்டம் தீட்டியிருந்தனர். துணைப் பிரதமரைத் தூக்கிச்சென்றுவிடாமல் காப்பாற்றி இலண்டன் சேர்க்க போலீசார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும்! ஏற்பாடுகளும் மிக மிக அதிகமாம்,

மாரிசனைச் சுற்றிய வண்ணம் போலீசார் இருந்தனராம். எனவே ஸ்காட் விடுதலைக் கிளர்ச்சியினர், போட்ட திட்டம் பலிக்கவில்லை என்பதாகக் கடைசியிலே வந்த செய்தியொன்று கூறுகிறது.

விடுதலைக் கிளர்ச்சியினர் போட்டிருந்த திட்டம் பலிக்கவில்லை. ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததை விட அதிகமான அளவு அரசாங்கம் கலங்கிவிட்டது ஒரு நாளில்!

அந்த அளவுக்கு, ஸ்காட்லாந்தைத் தனிநாடாக்க வேண்டும், என்று முழக்கமிடும் இயக்கத்தினர் ஆளவந்தாருக்குப் பீதியும், என்ன நேருமோ?' என்ற கவலையையும், கலக்கத்தையும் தந்துகொண்டேயுள்ளனர்.

தனி நாடாக வேண்டும் என்ற நமது கோரிக்கையைப் போன்றதுதான் அவர்களுடையதும்.

நாம் டில்லி மந்திரிகளைப் பகிஷ்கரிப்பது போலவே — அவர்களும் இலண்டனிலிருந்து தங்களை ஆளும் மந்திரிகளை விரும்பவில்லை.

பல்லாண்டுகளாக பிரிவினை கீதம் எழுப்பி வரும் நமது பாதையோ, ஸ்காத் வீரர்கள் செல்லும் பாதையல்ல.

நாம், பீதியும் குழப்பமும் ஏற்படாத வகையில் நமது கோரிக்கையை வலியுறுத்த விரும்புகிறோம்.

நமது எண்ணம் நேர்மையானது. நமது இதயம் களங்கமில்லாதது. நமது பாதை, பிறருக்குத் தீங்கு விளைக்காதது.

ஆனால், நாம், நடத்தப்படும் முறையோ மிக மிக மோசம். ஜனநாயகத்துக்கு உட்பட்ட கருப்புக் கொடி காட்டும் திட்டத்தை நாம் தொட்டதுமுதல், நம்மை இந்த சர்க்கார் நடத்தும்முறை, கேவலம் நிரம்பியதுமட்டுமல்ல; கோரமானதுங்கூட.

தடியடி! துப்பாக்கி! கைது! சிறைவாசம்! வழக்கு! தண்டனை! — இது போல விரிந்துகொண்டேயிருக்கிறது.

திருச்சி, மதுரை – தமிழகத்தின் முக்கிய இடங்கள். அங்கு, கருப்புக் கொடி நாள் நடைபெற்றபோது, நமது தோழர்கள் நடத்தப்பட்ட முறை, நினைத்தாலே நெஞ்சங் கொதிக்கக்கூடியதாகும்.

கடந்த வாரம், திருவையாற்றுக்கு வந்திருந்த இந்திய துணைப்பிரதமர் ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டினோம்!

தஞ்சைக்கருகில், வெண்ணாற்றங் கரையில் ஆயிரக்கணக்கான வீரர்கள் கருங்கொடி தாங்கி, கழகத்தின் திட்டத்தை, வெற்றியாக்கிக் காட்டினர்.

அமைதியாக, வரிசையாக அவர்கள் நின்ற காட்சியும் 'ஆச்சாரியாரே திரும்பிப்போம்' என்று, அங்கு எழும்பிய பேரொலியும், நமது உரிமைக் கிளர்ச்சியின் உருவத்தைக் காட்டின.

திராவிடத்தின் சிங்க இளைஞர், தன் எழுச்சி முரசால் இளையுள்ளங்களைக் கவர்ந்துவரும் கட்டிளங்காளை திருவாரூர் மு.கருணாநிதியும், புலவர் பட்டம் பெற்று தமிழாசிரியராசப் பணிபுரிந்தபோது, ஆளவந்தாரின் அடக்குமுறைக்கு ஆளாக நேரவே தனது பதவியை உதறிவிட்டு ஊருக்குழைக்கப் புறப்பட்ட இலட்சியக் காளை தஞ்சை ஏ. கே. வேலனும், அன்று அங்கு தலைமை தாங்கி நடத்திய காட்சி, பெருமிதமாக இருந்தது.

மேற்படி கருப்புக்கொடி நாளுக்கு தலைமை தாங்கி நடத்த மூன்று தோழர்கள் முன்வந்திருந்தனர்.

மூவரில் இருவர்மட்டுமே, களத்தில் நின்றனர்! இன்னொருவரான, இலட்சியக் காளை அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோவை, தஞ்சைவந்துகொண்டிருந்தபோதே வழியில் மடக்கி சிறைக்கு இழுத்துச் சென்றுவிட்டது, காங்கிரஸ் சர்க்கார்.

அன்று, அங்கு ஆச்சாரியாரை 'வரவேற்க' அலைகடலே திரண்டது போல, கொடிகள் அசைந்துகொண்டிருந்தன! சமுத்திரங்கள் திரண்டது போல காட்சி தந்தது — வெண்ணாற்றங் கரை! இந்த வெற்றியின் பெருமைக்கு, தஞ்சை மாவட்டத்தின் செயலாளர் கே. கே. நீலமேகம், மாயவரம் பழனிச்சாமி, மன்னார்குடி நாராயணசாமி, திருத்துறைப்பூண்டி ஹாஜாபீர், அம்பில் தர்மலிங்கம், குடந்தை பராங்குசம், தஞ்சை நடராசன், பதி, மணி, சோமு, கோவிந்தராசன், தாமரைச்செல்வன், அரங்கண்ணல் முதலான முன்னணி வீரர்கள்தான் காரணமாகும்.

ஆச்சாரியாரே மருளும்படியான அளவில் கருப்புக்கொடிகள் பறந்தன! தொண்டர்கள் ஆயிரமாயிரமாகக்கூடியிருந்தும், மாவட்ட போலீஸ் தலைமை அதிகாரி தனது தர்பார் மிரட்டலை அடிக்கடி காட்டிக்கொண்டிருந்தும், நமது மாவீரர்கள் அமைதியின் சின்னங்களாக இருந்தனரே தவிர சிறிதுகூட அமைதிக்குப் பங்கம் விளைவிக்கவில்லை.

இந்த அருமையான காட்சி ஆச்சாரியார் உள்ளத்தையே, திறக்க வைத்திருக்கிறது.

அவர் கூறுகிறார்.

"அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை மிக்க அமைதியான முறையில் தெரிவித்ததற்காக சந்தோஷப் படுகிறேன்."

ஆச்சாரியார், இந்தியாவின் போலீஸ் மந்திரி! முன்பு, அவர் இலாகா இல்லாத மந்திரியாக வந்தபோது கருப்புக்கொடி காட்டியபோது நமது இரத்தம் சென்னை வீதிகளிலே சிந்துமபடி செய்யப்பட்டது! நம்மீது பல முறை, அடக்குமுறை பாணங்களை வீசிய 'அருந்தியாகி' அவர்!

மிகக அமைதியான முறை — இதுதான், நாம் நடக்கும் பாதை. இந்த வழியில்தான் நாம் நடக்க விரும்புகிறோம்.

ஆனாலும், அமைதியான முறையில நடக்கும் நம்மீதுதான் 144 பாய்கிறது – நமது கண்மணிகளை சிறையிலே பூட்டுகின்றனர்!

நமது தாய்மார்களை வீதியிலே வீழ்த்துகின்றனர்! உதைக்கின்றனர்! சுடுகின்றனர்! கொடுமைப் படுத்துகின்றனர்!

நீதிப் பாதையில் நடப்போர் நாம்.

பலாத்காரம் விரும்பிகள் அல்ல நாம். நாணயமாக, நேர்மையான முறையில், அமைதி கெடாத வகையில் நமது இலட்சிய வாழ்வைப் பெற நாம் பாடுபடுகிறோம்.

நாம் யார் என்பதை, தஞ்சை நிகழ்சி, காட்டிவிட்டது.

இதை, அடக்குமுறைப் பாதையில் உருண்டுகொண்டிருக்கும், மந்திரிமார்கள், உணரவேண்டும்.

நாணயமற்ற, கேவலமான பாதையல்ல நம்முடையது.

Edited Printed & Published by C. N. Annadurai M A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram'